## புத்தசாசன நிதியம் - 2016

புத்தசாசன நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் நிதியத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காண்டு 2016 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்

நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய கணக்குகள், புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

2017 திசெம்பர் 13 ஆந் திகதிய பீஏஎஸ்'டீ'பீஎஸ்எப்'16'06 ஆம் கடிதத்தில் கணக்காய்விற்காக கோரப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வருமானம் மற்றும் வைப்புப் பணம் தொடர்பான தகவல்கள் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.4 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு

நிதியத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 10,571,873 |
| முதலீடுகள் | 483,124,346 |
| புத்தஜயன்தி காசு | 317,400 |
| பௌத்த தர்ம நூல்கள் | 12,896,049 |
| முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை | 13,024,546 |
| பெறவேண்டிய திறைசேரி உண்டியல் | 6,047,086 |
| தேசிய சேமிப்பு வங்கியின் நிலையான வைப்புக்ககளுக்காக கிடைக்க வேண்டிய வட்டி | 621,863 |
| சாமநேர, கப்பகரு செயற்திட்டம் - கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டி | 301,096 |
| கூட்டுறவு விற்பனை அபிவிருத்தி வைப்புக்கள் | 4,270 |
| அரச ஆசியான் சங்கம் | 7,282 |
| பெறவேண்டிய வட்டி - தேசிய சேமிப்பு வங்கி (நிறுத்தி வைத்தல் வரி) | 605,352 |
| **பணமும் வங்கியும்** | |
| இலங்கை மத்திய வங்கி | 2,956,630 |
| இலங்கை வங்கி | 94,156 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | |
| செலுத்த வேண்டிய சாமநேர படிகள் | 612,500 |
| பாலிடிக்கா சிங்கள மொழி பெயர்ப்பிற்கு செலுத்த வேண்டிய பணம் | 544,409 |
| 2600 years of budduism நூலுக்காக பதிப்பாசிரியர்களுக்கு செலுத்த வேண்டிய பணம் | 1,168,025 |
| மொத்த வருமானம் | 34,403,622 |
| மொத்த செலவினம் | 6,458,049 |
| மிகை | 27,945,574 |

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 8 (ஆ) பிரிவு | | முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் இலங்கை மத்திய வங்கியில் திறக்கப்பட்டுள்ள நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டுமெனினும், அவ்வருமானம் குறித்த கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் மீண்டும் முதுலீடு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 395(ஈ) | வங்கிக் கணக்கொன்று உள்ள ஒவ்வொரு நிறுவனத்தினாலும் ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்ககூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 756, 757 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீ.எப் 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.2 (ஈ) பந்தி | | வங்கிக் கணக்குகளும் புத்தகங்களும் இணக்கஞ் செய்து காலாண்டு ரீதியாக அறிக்கை தயாரித்து அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல், வாங்கல்கள்

2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிதியத்திற்குக் கிடைத்த மொத்த நன்கொடை பணத்தில் 85 சதவீதம் அதாவது ரூபா 70,596,618 தொகை தனியார் கம்பனியொன்றிலிருந்து கிடைத்திருந்தது. அப்பணம் நன்கொடையாளரின் தேவைப்பாட்டின் பிரகாரம் புத்தசாசன நிதியத்தின் ஊடாக விகாரை அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் களுத்துறை மத்துகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் புத்தர் சிலையொன்றை வடிவமைக்கும் செயற்பாடுகளுக்காக பட்டமுல்ல கந்த பௌத்த நிலையத்தின் சங்க சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தை கையளிப்பதற்காக நிதியம் தலையீடு செய்திராததுடன் நன்கொடையளித்த கம்பனியாலேயே ஒப்பந்தக் கையளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 செயலாற்றல்

---

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 9 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 5 செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் நிறைவேற்றப்பட்ட அச்செயற்பாடுகளும் முழு வருடத்திற்குமாக நிறைவேற்றுவதற்கு நிதியம் தவறியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான 3 மாதங்களுக்கு கெப்பகரு புலமைப்பரிசில் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 16 சாமநேர நிறுவனங்களுக்காக 192 மாதங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 111 மாத காலப்பகுதிக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) வயது சென்றுள்ள பிக்குமார்களுக்கு ஓய்வு வயது தொடர்பாக 06 செய்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 3 நிகழ்ச்சிகள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டில் ரூபா 25,696,736 தொகை நிதியத்தின் வருமானமாக கிடைத்திருந்த போதிலும் அதில் 26 சதவீதம் மாத்திரம் நிதியத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 13,970,109 தொகை விளைவற்ற வகையில் இலங்கை மத்திய வங்கியின் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.2 பதவியணி முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்திற்காக புறம்பான பதவியணியொன்று அங்கீகரிக்கப்படாத காரணத்தினால் முறையான வேலைப் பகிர்வொன்றும் உள்ளகக் கட்டுப்பாடொன்றும் இடம்பெறும் வகையில் வேலைகளை கையளிப்பதற்கு முடியாதிருந்தது.

(ஆ) புத்தத சாசன நிதியத்தின் செயலாளர் மற்றும் கணக்காளர் பதவிகளுக்காக புத்தசாசன அமைச்சின் சமூக பணிப்பாளர் மற்றம் பிரதான கணக்காளர் ஆகிய பதவிகள் பதில் கடமை உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டிருந்ததுடன் நிதியத்திற்காக இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் கடமைகள் அவர்களுக்கு இடையே அவ்வப்போது கண்காணிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

---

நிதியத்திற்காக புறம்பாக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் உரிய வரிசை அமைச்சு மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

---------------------------------------------------

2016 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்ற தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் நிர்வாக சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

2016 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் 4.1 இன் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க பாதீடு தயாரிக்கப்பட்டு தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கும் அரச நிதி பணிப்பபாளர் நாயகத்திற்கும் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.